**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபை - 2023**

------------------------------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மாநகர சபைகள் சட்டத்தின் (252 அதிகாரம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பன உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுக் நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க

கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாக கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மாநகர சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஜனஜய சிட்டி கட்டிட நிர்மாணத்திற்காக 2023 ஆம் ஆண்டில் ஒப்பந்தக் கம்பனிக்கு கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 53,616,976 மற்றும் மதியுரை நிறுவனத்துக்கு செலுத்தப்பட்ட ரூபா 1,813,500 தொகை பாலம் மற்றும் மதகு கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | நாட்குறிப்பு பதிவு மூலம் சீராக்குவதற்கு குறித்துக் கொண்டுள்ளதாக | குறித்த சொத்துக்களை சரியாக சொத்துக் கணக்குகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஜனஜய சிட்டி மீச் சந்தை வியாபார தொகுதி நிர்மாணத்திற்காக ஒப்பந்த காலம் நீடிப்பதற்கு நேர்ந்தமையால் ஒப்பந்தக்காரருக்கு செலுத்த வேண்டிய பெறுமதி நிகழத்தக்க பொறுப்பாக காண்பிக்கப்பட்டிருந்த போதும் பட்டியல் கொடுப்பனவு தாமத கட்டணமாக செலுத்த வேண்டியதாக காணப்பட்ட ரூபா 66,858,731 தொகை நிகழத்தக்க பொறுப்பாக காண்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | 2023 நிதிக் கூற்றுகளில் 10 ஆம் பக்கத்தில் 07 ஆம் விடயத்தின் கீழ் நிகழத்தக்க பொறுப்பாக காண்பிக்கப்பட்டுள்ளதாக | நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (இ) | 2020 ஆம் ஆண்டின் போது மீள் மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 512,834,813 ஆன நிலையான சொத்துக்கள் பெறுமதிக்குரிய பெறுமானத் தேய்வு மேற்கொள்ளப்படாத இருந்தத்துடன் 2020 ஆம் ஆண்டின் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களுக்காக மாத்திரம் பெறுமானத்தேயவு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பெறுமானத் தேய்வு செய்யும் போது ரூபா 1,417,377 | 2020 ஆம் ஆண்டின் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக் களில் 2023 ஆம் ஆண்டிற்குரிய கணக்கிடப்பட்ட பெறுமானத் தேய்வு ஒதுக்கீட்டுப் பெறுமதி மீண்டும் ஒதுக்கப்பட்டு கணக்காய்வு பிரிவின் தகவல்களுடன் சீராக்கம் செய்து சரி செய்வதற்கு குறித்து கொண்டுள்ளதாக | பெறுமானத்தேய்வு சரியாக இனங் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | குறைத்தும் ரூபா 2,589,429 கூடுதலாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | மீளாய்வண்டின் நிலையான சொத்துக்கள் கொள்வனவு ரூபா 2,200,110 நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை | நாட்குறிப்பு பதிவுகள் மூலம் சீராக்குவதற்கு குறித்துக் கொண்டுள்ளதாக | கணக்குகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும் |
| (உ) | மீளாய்வாண்டில் நன்கொடையாக கிடைத்திருந்த நூலக புத்தகங்களின் பெறுமதி ரூபா 290,686 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இது நாட்குறிப்பு பதிவுகள் மூலம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | - மேற்படி - |
| (ஊ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,481,525 ஆன கடன் கொடுத்தோர் நானாவித கடன் கொடுத்தோர் மற்றும் களஞ்சிய கடன் கொடுத்தோர் கணக்குகளில் இரண்டிலும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | நாட்குறிப்பு பதிவுகளை இட்டு சீராக்குவதற்கு குறித்துக் கொண்டுள்ளதாக | - மேற்படி - |
| (எ) | மீளாய்வாண்டு பிரசைகள் சாசன அறிவித்தல் பலகைக்காக ரூபா 400,000 மற்றும் ஏணிகள் கொள்வனவுக்காக செலவிடப்பட்ட ரூபா 575,000 தொகை மீண்டெழும் செலவினங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டு இருந்தன. | நாட்குறிப்பு பதிவுகள் மூலம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | - மேற்படி - |
| (ஏ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 4,275,417 பெறுமதியான தொட்டிகள் மற்றும் உபகரணங்கள் அக்கணக்கின் கீழ் கணக்கீடு செய்யப்படாமல் வீதிகள் மற்றும் மதகுகளின் கணக்குக்கு வரவு வைக்கப்பட்டிருந்தன. | நாட்குறிப்பு பதிவுகள் மூலம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | - மேற்படி - |
| (ஐ) | ரூபா 674,520 பெறுமதியான 06 உருப்படிகள் பொருத்திகள் கணக்கிற்கு வரவு வைக்கப்படாமல் கட்டிட கணக்கிற்கு வர வைக்கப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு குறித்துக் கொண்டுள்ளதாக | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஒ) | வண்டி காப்பாளர் ஊழியர் மற்றும் ஆதனங்கள் தடை உத்தியோகத்தர் பிணை வைப்பு சேமிப்புக் கணக்குகளில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ரூபா 692,054 ஆக இருந்த போதும் ரூபா 716,228 ஆக நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | நாட்குறிப்பு பதிவுகள் மூலம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | - மேற்படி - |
| (ஓ) | இருப்பு பகுப்பாய்வின் பிரகாரம் ரூபா 204,491 ஆன மீண்டெழும் செலவினம் மற்றும் ரூபா 3,488,954 ஆன நிலையான சொத்துகளுக்குரிய கணக்குகளில் வரவு வைக்கப்படுவதற்குப் பதிலாக இருப்பு கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | நாட்குறிப்பு பதிவுகள் மூலம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | கணக்குக் சரியாக தயாரிக்கப்பட வேண்டும் |

**1.6.2 <u>இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்</u>**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 கணக்குகுளின் பேரேட்டு மீதிகள் மற்றம் அட்டவணைக்க இடையே ரூபா 675,157 ஆன வேறுபாடு காணப்பட்டது | நாட்குறிப்பு பதிவுகள் மூலம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | வேறுபாடுகளை இனங்கண்டு சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| | விடயம் | தொகை ரூபா | வழங்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | இனங்காண படாத ஊழியர் கடன் | 1,641,884 | அட்டவணை | 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய மீதிகளாக இருந்ததுடன் இம்மீதிகளை இனங்கண்டு பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக . | அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மதிப்பிழந்த காசோலை | 581,650 | அட்டவணை | நாட்குறிப்பு பதிவுகள் மூலம் சீராக்குவதற்கு குறித்துக் கொண்டுள்ளதாக | மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | இருப்பு | 39,845,468 அட்டவணை | குறைபாடுகளை இனங்கண்டு சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | மேற்படி - |

**1.7 இணங்காமைகள்**

1.7.1 **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.**

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 104 மற்றும் 104(3)(4) | சபையின் 10 வாகனகளுக்குரிய மீளாய்வாண்டில் இடம் பெற்றுள்ள விபத்துக்கள் தொடர்பான பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | எதிர்காலத்தில் வாகன விபத்துக்கள் தொடர்பான நி.பி 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 1989 ஜனவரி 20 ஆந் திகதிய வர்த்தமானியின் II ஆம் பிரிவின் விளம்பர அறிவித்தலின் (1) ஆம் பந்தி | எவரேனும் நபர் ஒருவரால் ஏதேனும் ஒரு வகையில் வீதியில், வீதிக்கு, வாய்க்காலுக்கு அல்லது குளத்திற்கு தெரியக் கூடிய வகையில் ஏதேனும் அறிவித்தல் ஒன்றை காட்சிப்படுத்து வதற்கு ஆணையாளரால் வழங்கப்பட்ட அனுமதி பத்திரமொன்றின் கீழ் மேற் கொள்ளப்பட வேண்டிய போதிலும் சபை அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள அவ்வாறான 87 பதாகை களுக்காக பணம் செலுத்தப்படாமல் இருந்ததுடன் அவற்றை கழற்றி | தற்போது கட்டணங்கள் செலுத்தாத உள்ள பதாகைகளை கழற்றி அகற்றும் நடவடிக்கை தொடர்ச்சியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவு | சபைக்கு சொந்தமான 07 வாகனங்கள் தொடர்பில் எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை | கணக்காய்வின் போது சுட்டிக் காட்டப்பட்ட 07 வாகனங்களுக்காக எரிபொருள் எரிவு பரிசோதனை ஒன்று மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 210,290,184 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 305,213,090 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

நகர சபை செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்ப ட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 283,200 | 268,546 | 279,125 | 197,088 | 284,500 | 256,056 | 207,781 | 173,684 |
| (ii) | வாடகை | 100,073 | 72,890 | 72,339 | 45,619 | 74,181 | 75,250 | 77,390 | 31,776 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 38,476 | 42,215 | 42,215 | 0 | 20,500 | 27,555 | 27,570 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 1,344,534 | 629,122 | 632,330 | 4,192 | 144 | 106 | 115 | 3 |
| | | ----------- | ------------ | ------------ | ----------- | ------------ | ----------- | ------------ | ---------- |
| | | 1,766,283 | 1,012,773 | 1,026,009 | 246,899 | 379,325 | 358,967 | 312,856 | 205,463 |
| | | ======= | ======= | ======= | ====== | ======= | ======= | ====== | ====== |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு அறவிடப்படாமல் காணப்படும் வீதவரி மீதி ரூபா 141,865,710 ஆக இருந்தது. | வீத வரி மீதி 2023.12.31 இல் உள்ளவாறு ரூபா 173,248,927 நிலுவையில் தற்போது ரூபா 31,383,217 தொகை வந்து அறவிடப்பட்டுள்ளதாக | அறவிடப்பட வேண்டிய பெறுமதியை தாமதம் இன்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(ஆ) கடை வாடகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய மொத்த கடை வாடகை வருமானம் ரூபா 35,090,412 ஆக இருந்ததுடன் ஓராண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த நிலுவை கடை பெறுமதி ரூபா 30,130,251 ஆக இருந்தது. | நிலுவை கடை வாடகையை அறவிடுதற்கு இத்திகதியில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | அறவிடப்பட வேண்டிய கடை வாடகையை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | வெளிக்கட பிளாசா பொது வர்த்த தொகுதியில் 10 கடைகள் கேள்வி கோரி வாடகைக்கு வழங்கப்படாமல் இருந்ததுடன் ஏனைய கடைகள் 1998 ஆம் ஆண்டு முதல் வியாபார நடவடிக்கைகளுக்காக கடை உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது 2013 வரை கடை அரை வாடகை சபையின் வருமான பரிசோதரர்களால் மதிப்பீடு செய்து அதன் மீது வாடகை அறவிடப்பட்டிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டில் விலை மதிப்பீட்டு திணைக்களத்தின் மூலம் புதிய | இந்த 10 கடைகளையும் கேள்வி கோரி வாடகைக்கு வழங்க தேவையான அளவிற்கு எடுக்கப்பட்டுள்ளதாகவும் கடைசி உரிமையாளர்களின் எதிர்ப்பின் தொடர்பாக மேல் மாகாண பிரதான செயலாளரின் ஆலோசனையின் பேரில் மீண்டும் வெளிக்கட பிளாசா வியாபாரத் தொகுதியில் கடை | புதிய மதிப்பீட்டை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பீடு ஒன்றை மேற்கொண்டு கடைகளுக்காக பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதும் கடை உரிமையாளர்களின் எதிர்ப்பினால் மதிப்பீட்டை செயற்படுத்த முடியாமல் இருந்தது. | மதிப்பீடு செய்வதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் விலைமதிப்பீட்டு திணைக்களத்தின் புதிய கடை மதிப்பீட்டு கிடைத்த பின்னர் குறித்த நிலுவையுடன் கடை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | |
| (இ) | மீளாய்வாண்டிற்காக பட்டியலிடப்பட்ட முத்திரை கட்டணங்கள் ரூபா 500,000,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அளவிடப்பட வேண்டிய முத்திரை கட்டணங்கள் ரூபா 152,347,461 ஆக இருந்தது மேலும் மீளாய்வாண்டின் இறுதி வரையில் நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 3,891,500 தொகை அறவிடப்பட வேண்டி காணப்பட்டதுடன் அம்மீதிகள் 05 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்கரிய ரூபா 879,787 தொகையும் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 3,011,713 தொகையாக இருந்தது. | தற்போது முன்னைய ஆண்டுகளுக்கு உரிய பட்டியலிடப்பட்ட வருமானத்தின் நிலுவை வருமானம் சேகரிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் நிலுவை வருமானத்தை இனங் காணுதல் மற்றும் சேகரிப்பதற்காக சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ள தாகவும் நீதிமன்ற தண்டப்பணம்<br><br>2013 ஆம் ஆண்டில் இருந்து அறவிடப்பட வேண்டிய தொகை தொடர்பாக மேலும் ஆராய்ந்து பார்த்து அளவிடுவதற்கு எதிர்பார்த்து உள்ளதாக | நிலுவை வருமானம் இனங்கானப்பட்டு விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஈ) | சபை அதிகார பிரதேசத்தில் இரண்டு சினிமா கொட்டகைகளில் இருந்து 2019 ஆம் ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டிய களியாட்டம் வரி மீதி ரூபா 2,781,679 தொகை 2023 திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | களியாட்ட வரி தொடர்பாக கடிதம் ஒன்றை உள்ளுராட்சி மன்ற உதவி ஆணையாளருக்கு அங்கீகரித்துக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ள | அறவிடப்பட வேண்டிய களியாட்ட வரி வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| | துடன் அதற்காக கணக்காய்வு திகதி வரை அங்கீகாரம் கிடைக்கவில்லை என்பதாக | எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

.

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | விளம்பர அறிவித்தல் சபை அதிகார பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்படுவதற்கு ஆணையாளரின் அங்கீகாரம் தேவையாக இருந்ததுடன் உரிய கட்டணங்கள் செலுத்தும் வரை அதற்காக அனுமதிப்பத்திரத்தை விண்ணப்பதாரிக்கு வழங்கக்கூடாது எனினும் 2023 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விளம்பர அறிவித்தல் பதாகை, வியாபார பெயர் பலகை மற்றும் பெயர் பலகை விண்ணப்பங்கள் இடையே ரூபா 127,100 பெறுமதி உடைய மூன்று விண்ணப்பங்கள் கட்டணம் செலுத்தப்படாதிருந்ததுடன் அந்த விண்ணப்பங்களுக்குரிய அறிவித்தல் பதாகைகள் சபை அதிகார பிரதேசத்தில் காட்சிப்படுத்தப் பட்டிருந்தமை பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது எனினும் அக்கட்டணங்களை அறவிடுவதற்கு எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | கணக்காய்வினால் சுட்டிகாண்பிக்கப் பட்ட 08 நிறுவனங்களுக்கான கட்டணங்கள் பெயர் பலகை கணிப்பீட்டின் போது இனங் காணப் பட்ட இடங்களுக்காக செயற்படுத்தப்பட்டுள்ளது பௌதீக ரீதியாக 2023 ஆம் ஆண்டில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த தை உறுதிப்படுத்திய பின்னர் கட்டணங்கள் தீர்மானிக்கப்படுவதாக | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | கட்டணங்கள் செலுத்தாத பெயர் பலகைகளை கழற்றி அகற்றுவதற்காக பிரதான மாநகர பொறியியலாளரின் பங்களிப்புடன் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதும் 2016 முதல் 2023 வரை கட்டணங்கள் | நாட்டில் காணப்பட்ட கொரோனா தொற்று நிலைமை காரணமாகவும் அதன் பின்னர் ஏற்பட்ட சீராற்ற பொருளாதார நிலைமை காரணமாகவும் கிடைத்த | பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | |
|---|---|
| செலுத்தாத ரூபா 70,245,648 ஆன பெறுமதியான 435 பெயர் பலகைகள் மற்றும் ரூபா 28,224,248 ஆன பெறுமதியுடைய 118 அறிவித்தல் பலகைகளுக்காக 2023 ஒக்டோபர் வரையிலும் நிலுவைத் தொகை கிடைக்காமல் இருந்ததுடன் பெயர் பலகைகளை கலற்றி அகற்றப்பட்டிருக்கவுமில்லை. நிலுவைத்தொகை பெற வேண்டிய பணமாக முன் கொண்டுவரப்பட்டு இருக்கவுமில்லை. | விண்ணப்பங்களின் பிரகாரம் இச்செயற்பாடு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த துடன் இதுவரை கட்டணங்களை செலுத்தாத பதாகைகளை கழற்றி அகற்றுவதற்கு தொடர்ச்சியாக நடவடிக்கை எடுத்து வருவதாக |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொரோனா காணப்பட்ட காலப் பகுதியில் வழங்கப்பட்டிருந்த கொரோனா முற்பண அட்டவணையின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மீதியாக காணப்படும் ரூபா 960,160 மீளாய்வாண்டின் இறுதி வரையில் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கணக்கு புத்தகங்களில் காண்பிக்கப்படாத மீதிகளை மீண்டும் புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டு எதிர்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உள்ளதாக | கணக்கு புத்தகங்களில் காண்பிக்கப்படாத மீதிகள் தொடர்பாக ஆராய்ந்து பார்த்து மீண்டும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | முதலாவது கொவிட் அலை சந்தர்ப்பத்தின் போது சபை மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த சலுகை அடிப்படையில் பொருட்கள் விற்பனை மற்றும் பகிர்ந்தது நிகழ்ச்சிதிட்டத்தின் கீழ் சபைக்கு விற்பனைக்காக பொருட்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதும் அதில் கிடைத்த பணம் சபை நிதியத்திற்கு செலவு வைக்காமை காரணமாக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய கொரோனா முற்பண மீதி ரூபா 1,291,160 தொகையை அறவிடுவதற்கு | இது தொடர்பாக இலஞ்ச ஊழல் முறைப்பாட்டு புலனாய்வு ஆணைகுழு வினாலும் உள்ளூராட்சி மன்ற உதவி ஆணையாளர் அலுவலகத்தின் மூலமும் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அதன் பெறுபேறுகளின் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு எதிர்பார்த்து உள்ளதாக | பரிசோதனை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் பொருத்தமான நடவடிக்கை எடுத்தப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை | | |
| (இ) | கோட்டை அதிகாரப் பிரதேசத்தில் மக்களால் நீர் வழங்கல் பெற்றுக்கொள்ளும் போது இடம்பெறும் வீதி துளையிடலுக்காக சபையால் பொது மக்களிடமிருந்து 2023 ஆம் ஆண்டின் ஒக்தோபர் வரை ரூபா 1,490,252 தொகை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதும் மீண்டும் அவை திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வினால் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள வீதி பழுதுபார்ப்புக்களை முறையாக திருத்தம் செய்தல் வேண்டும். | உடைக்கப்பட்ட வீதிகளை உரிய நிலைக்கு கொண்டு வருவதற்கு விரைவில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | ஜனஜய சிட்டி வர்த்தகத் தொகுதியை அமைப்பதற்காக 2014 ஆம் ஆண்டு முதல் பட்டியல் பெறுமதியை குறைத்துக் கொடுப்பனவு செய்தமையால் ரூபா 31,120,027 ஆன தாமத கட்டணங்கள் செலுத்தப்பட்டிருந்தது மேலும் இப் பெறுமதி உருவாகிய முறை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை | சபையினால் ரூபா 31,120,027 ஆன தாமதம் கட்டணம் ஒன்று செலுத்தப்பட்டமை 2014 ஆம் ஆண்டில் பட்டியல் பெறுமதியினை விட குறைந்த பெறுமதி கொடுப்பனவு செய்த காரணத்தினால் எஞ்சிய தொகை மீதிக்காக உடன்படிக்கை பிரகாரம் நிலுவை மீதிகளுக்காக வட்டி செலுத்த சேர்ந்ததாக | தாமதம் இன்றி பட்டியல் தீர்ப்பனவு செய்வதன் மூலம் சபைக்கு செலவிடுவதற்கு நேர்ந்த இவ்வாறான பாரிய நிதி நட்டத்தை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| வெலிக்கட பிளாசா வர்த்த தொகுதிக்காக 2023 ஆம் ஆண்டுக்காக அரச விலை மதிப்பீட்டு திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த மாதாந்த கடை வாடகை அறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு கடைகளுக்கு உரிய புதிய கடை வாடகை பெறுமதி அறிவிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டது. கடை உரிமையாளர் கள் அவர்கள் கடையை மீண்டும் குத்தகைக்கு வழங்கி பெறுகின்ற | சபையின் வருமான பரிசோதகர் ஒருவரால் தற்போது வெலிக்கட பிளாசா கடை உரிமையா ளர்கள் உப குத்தகைக்கு வழங்கியுள்ளனரா என பரிசோதனை மேற்கொண்டு வருவதுடன் அதன் பின்னர் உடன்படிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக | உடன்படிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| வருமானம் குறைவடைவதால் புதிய கடை வாடகை மதிப்பீட்டுக்கு இணங்காத முடியாதென தெரிவித்தனர். எனினும் இந்த கடை உரிமையாளர்கள் மாதாந்தம் ரூபா 21,000 அளவிலான அனுமதி அற்ற வருமானம் உழைப்பதாகவும் குத்தகை ஒப்பந்தத்தின் 18 ஆம் நிபந்தனை மீறி இருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அந்த உடன்படிக்கையை மீறியமைக்கு எதிராக சபை எந்த ஒரு சட்ட நடவடிக்கை ஒன்றையும் எடுத்திருக்கவில்லை | | |

**3.4 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாட்டிலான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நுகேகொடை பேருந்து நிறுத்துமிடத் தொகுதியின் காணப்படும் 48 கடைகளில் 43 கடைகள் 2023 நவம்பர் வரையிலும் குத்தகைக்கு வழங்கப்படாமல் மூடப்பட்டு காணப்பட்டன. இதன் காரணமாக சபைக்கு இழக்கப்படும் வருமானம் ரூபா 42,958 ஆக இருந்தது. | நகர அபிவிருத்தி அதிகாரசபை கலப்பு அபிவிருத்தி செயற்திட்டம் ஒன்றாக மீண்டும் ஆரம்பிக்கப்படும் வரை குறித்த வியாபாரத் தொகுதியில் மீண்டும் குத்தகைக்கு வழங்குவதற்கு இயலுமையொன்று காணப்படுகின்றதா என நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் மீண்டும் விசாரித்துள்ளதாக | பொருத்தமான நடவடிக்கை எடுத்து வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) ஜன சிட்டி வியாபாரத் தொகுதியின் முன்னால் வாகனங்கள் நிறுத்துமிடம், நகர சபைக்கு முன்னால் உள்ள வாகனங்கள் நிறுத்தும் இடம் ராஜகிரிய கார்ட்ன்ஸ், புத்தகமுவ வீதி, செப்பல் வீதி ஆகிய வாகன நிறுத்தமிடங்களில் வருமானம் சேகரிப்பதற்கு முக்கியமான இடங்களாக அபிவிருத்தி செய்யப்பட்டு இருக்கவில்லை. | எதிர்காலத்தில் அந்த வாகனங்களை நிறுத்தும் இடங்கள் மற்றும் புதிய வாகனங்கள் நிறுத்துமிடங்கள் இனங் காணப்பட்டு எதிர்காலத்தில் குத்தகைக்கு வழங்க தேவையான நடவடிக்கைகள் எடுப்பதாக | பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்து வருமானத்தை ஈட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சபைக்கு உரிய 04 வாகனங்கள் கராஜ் ஒன்றுக்கு கையளிக்கப்பட்டு 3 மாதங்கள் முதல் 6 மாதங்கள் வரையான காலம் கடந்திருந்த போதும் கணக்காய்வு திகதி வரையிலும் உரிய திருத்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு வாகனங்களை மீண்டும் பயன்பாட்டுக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்படி திருத்த வேலைகள் காணப்படும் வாகனங்களை மிக விரைவில் திருத்தி ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | விரைவில் திருத்த வேலைகளை மேற்கொண்டு மீண்டும் பயன்பாட்டுக்கு எடுக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | ஓட்ட நிலைமையில் இருந்து அகற்றப்பட்ட கைதவிர்ப்பதற்கு இணங்காணப்பட்டிருந்த ரூபா 26,422,000 பெறுமதியான 5 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கை தவிர்ப்பதற்கு இணங் காணப்பட்ட இரண்டு வாகனங்களை கல்வி நடவடிக்கைகளுக்காக பாடசாலை ஒன்றுக்கு நன்கொடை அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் கைதவிர்க்கப்பட உள்ள உடைந்த வாகனங்கள் கைதவிர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக | விரைவில் கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு சபையின் களஞ்சியப் பொருட்களின் இருப்பு பெறுமதி ரூபா 158,216,652 மற்றும் கட்டிடத்தின் பெறுமதி ரூபா 127,416,735 ஆகவும் இருந்த போதும் களஞ்சியப் பொருட்கள் மற்றும் கட்டிடங்களுக்காக காப்புறுதி மேவுகையொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தற்போது காப்புறுதி செய்யும் செயற்பாடு தொடங்கப் பட்டுள்ளதாகவும், தேவை யான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உடனடியாக காப்புறுதி செய்வதற்கு உள்ளதாகவும். | சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | சபையால் உடமை கொண்டுள்ள 13 காணிகளின் சட்ட ரீதியான | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்ட | சட்ட ரீதியான உரித்தை சபைக்கு |

| | | | |
|---|---|---|---|
| | உரித்தை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படவில்லை. | காணிக்காக வெளியீட்டு உறுதியுடன் அனைத்து காணிகளுக்கும் கையளிப்பு கட்டளையை பெற்றுக்கொள்வதற்காக உள்ளுராட்சி ஆணையாளருக்கு (மே.மா) 24.10.2023 திகதிய விண்ணப்பங்கள் Law/2008/21-4 இன் கீழ் அனுப்பப்பட்டுள்ளன. | கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.6 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் சிரேஷ்ட, மூன்றாம் தர, இரண்டாம் மற்றும் ஆரம்ப பதவி மட்டங்களில் 199 உத்தியோகத்தர்களின் வெற்றிடம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்டது. | சபையில் உள்ள ஊழியர் வெற்றிடங்கள் தொடர்பான அறிக்கைகள் மாதாந்தம் உள்ளுராட்சி ஆணையாளர் அலுவலகத்திற்கு சபையினால் அனுப்பி வைக்கப்படுவதுடன், ஆரம்ப நிலைகளுக்கான பணியாளர்கள் ஆட்சேர்ப்பை அரசாங்கம் நிறுத்தியுள்ளதால், பணியாளர் வெற்றிடங்களை நிரப்புவதில் சிரமமான செயற்பாடொன்றாக உள்ளது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 5 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாக அறவிடப்படாமல் காணப்படும் ரூபா 8,842,794 தொகையான ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இந்த நிலுவைகளை கண்டறியும் பணிகள் மேற் கொள்ளப்பட்டு வருவதுடன், இது தொடர்பான மேலதிக ஆலோசனைகளை பெற்றுக் கொண்டு எதிர்வரும் நடவடிக்கைகளை மேற் கொள்ளப்பட உள்ளதாக. | ஊழியர் கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4 கணக்களி பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மேல் மாதகாண உள்ளுராட்சி மன்ற ஆணையாளரின் 2021 நவம்பர் 10 ஆந் திகதிய LGD/02/2021 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், 2023 நிதியாண்டிற்கான தொடர்புடைய நிதிக் கூற்றுக்கள் அறிக்கைகள் 2024 பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குசமர்ப்பிக்கப்பட வேண்டும் ஆனால் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையின் 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | 2024 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிர்ணயிக்கப்பட்ட திகதியில் சமர்ப்பிப்பதற்கு குறித்துக் கொண்டுள்ளதாக | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | 245 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 144,809,020 கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. | எதிர்பார்த்தவாறு குறித்த செலவு விடயங்கள் தொடர்பான உறுதிச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப் படாமையாலும் நிதியை சிக்கனமாகப் பயன்படுத்திய தாலும் இந்தப் பணம் சேமிக்கப்பட்டுள்ளதாக. | தேவையை இனங் கண்டு அதன் அடிப்படையில் பாதீடு தயாரிக்க வேண்டும். |
| (ஆ) | 59 செலவின விடயங்களுக்காக ரூபா 89,722,800 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதும் அதில் 75 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவொன்று செலவிடப்படா திருந்ததுடன் அதன் அளவு ரூபா 70,251,437 ஆக இருந்தது. | மேற்படி | பாதீட்டினை செயற்திறனான கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்த வேண்டும். |